# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.142/2021 நாள்.04.07.2025

PW1- திருமதி. பிரியகாருனி க /பெ. அனந்த ராஜன்

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தாவா 2வது அயிட்ட சொத்து எனது கணவருக்கு அவர் தாய்வழி சொத்து என்றால் ஆமாம். 1944 ஆம் ஆண்டு தாவா 2வது அயிட்ட சொத்துக்களை எனது மாமியார் ஜெயலெட்சுமிக்கு அவரது தகப்பனார் ராஜா ஒரு உயில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த உயில் ஆவணத்தில் ராஜா காலத்திற்கு பிறகு ஜெயலெட்சுமிக்கும் அவர் காலத்திற்கு பிறகு ஆண் வாரிசுக்கும் என்று ஆவணத்தில் உள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் அந்த உயிலை பார்த்தேன் என்றால் ஆமாம். அந்த உயில் பற்றி பிராதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். ராஜா எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து எனக்கு பாகம் கிடைக்காது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் ஆமாம். அதற்கு அவர் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அந்த பதில் அறிவிப்பில் எனது கணவர் உயிருடன் இருந்தபோது வாங்கிய கடன் பற்றிய விவரங்களை சொல்லியிருந்தார் என்றால் இல்லை. இந்த வழக்கு பிராதிலும் அந்த கடன்களை மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். என் கணவருக்கு ராஜீ என்ற நண்பர் இருந்தார் என்றால் ஆமாம். கணவர் ஒய்வூதியம் வாங்கினார் என்றால் ஆமாம். அவர் பென்சன் புக் அடமானம் வைத்து ராஜீவிடம் இறப்பதற்கு முன்பாக 2லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால் கடன் வாங்கியிருந்தார் தொகை தெரியாது. அந்த கடனை உயிருடன் இருக்கும் வரை அடைக்கவில்லை என்றால் தெரியாது. அந்த கடனை 2ஆம் பிரதிவாதிதான் அடைத்தார் என்றால் ஆமாம். தாவா 1வது அயிட்ட சொத்து உள்ள கடைகள் 2009 ஆம் ஆண்டு நிக்கல்சன் வங்கியில் கடன் வாங்கி கட்டபட்டது என்றால் ஆமாம். என் நாத்தனார் பெயர் பத்மாவதி என்றால் ஆமாம். என் கணவருக்கு அவர் அடிக்கடி கடன் கொடுப்பார் என்றால் ஆமாம். 2016 இல் எனது கணவர் பத்மாவதியிடம் 2லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. HDFC வங்கியில் 2லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால் தெரியாது. 2018 ஆம் வருடம் வங்கி கடன்களை அடைப்பதற்காக பத்மாவதியிடம் ரூ 3லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால் அதுவும் தெரியாது. பத்மாவதி கொடுத்த கடன் வட்டிக்கு கொடுத்தார் என்றால் வாங்கியதும் தெரியாது வட்டியும் தெரியாது. என் கணவர் உயிருடன் இருந்தபோது என் மகனுக்கு திருமணம் ஆகி குடும்ப விவகாரங்களை அவரும் சேர்ந்து பார்த்தார் என்றால்

இல்லை. என் கணவர் உயிருடன் இருந்தவரை குடும் ப நிர்வாகத்திற்காக என்ன கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என் கணவர் இறந்தபிறகு 2ஆம் பிரதிவாதிதான் குடும்ப நிர்வாகம் பார்த்து இன்று வரை கடன்களை அடைத்து வருகிறார் என்றும் இன்னம் கடன் உள்ளது என்றும் சொன்னால் தெரியாது. விவசாய நிலங்களை யார் விவசாயம் செய்து வருகிறார் என்றால் யாரும் செய்யவில்லை. வழக்கு தாக்கல்செய்வதற்கு முன்பாகவோ வழக்கிற்கு பின்போ போய் பார்க்கவில்லை என்றால் ஆமாம். பார்க்காததால் அந்த நிலங்களை யார் விவசாய்ம செய்கிறார்கள் என்னால் சொல்லமுடியாது என்றால் ஆமாம். நானும் விவசாயம் செய்யவில்லை என்றால் ஆமாம். 1வது அயிட்ட சொத்து கடைகளிலிருந்து நான் வாடகையை நான் வாங்குகிறேனா என்றால் நான் வாங்கவில்லை. கணவர் இறந்தபிறகு யார் வாடகையை வாங்குகிறார்கள் என்றால் தெரியாது. வாடகை பணத்தை பிரித்து கொடுப்பதாக சொல்வது தவறு. என்னுடைய 2வது மகனுக்கு வேலூரில் தனியாக மனை வாங்கி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் எல்லாம் அனுபவத்தில் என்னிடம் இல்லாததால் அதை மறைத்து தவறாக நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்து என் கணவருக்கு எப்படி கிடைத்தது என்றால் என் மாமனார் எழுதி வைத்தது. 1வது அ யிட்ட சொத்தில் எனக்கு பாகம் வேண்டும் என்றால் குடும்ப கடன்களிலும் நான் பாகம் ஏற்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தில் எனக்கு பாகம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.